ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1764/5 - 2012 ජූනි මස 27 වැනි බදාදා - 2012.06.27

*1764/5 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 27 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம்*

*14 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சர் றிஷாட் பதியுதீன் ஆகிய நான், 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14(1) ஆம் பிரிவின் மூலம் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், நிதி, திட்டமிடல் அமைச்சின் இணக்கப்பாட்டுடன் 2012, யூன் மாதம் 28 ஆந் திகதியிலிருந்து பயன்வலுப் பெறும் வகையில், இப்பிரிவின் நோக்கங்களுக்காக இங்கு கீழ் தரப்பட்டுள்ள அட்டவணையின் III ஆவது நிரலில் குறிப்பிடப்பட்டிருக்கும் பொருட்கள் இறக்குமதி செய்யப்படும் சந்தர்ப்பத்தில் அட்டவணையின் நேரொத்த IV ஆவது நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள சதவீதங்களின்படி செஸ் வரியொன்று தீர்மானிக்கப்பட்டு அறவிடப்படல் வேண்டுமென இக்கட்டளை மூலம் பிரகடனப்படுத்துகிறேன். அவ்வாறே, 2011.11.21 ஆந் திகதிய 1733/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியிலுள்ள அட்டவணை நிரல் I இல் இ. பொ. தலைப்பு 0710.80.10, 0712.20, 0712.90.10, 0712.90.90, 0805.20.10, 11.01, 1901.90.10, 1901.90.90 மற்றும் 72.04 இன்கீழ் குறிப்பிடப்படும் ஒவ்வொரு பொருட்களுக்கும் அதற்கு நேரொத்த IV ஆம் நிரலில் குறிப்பீடு செய்யப்பட்ட செஸ் வரியானது 2012, யூன் மாதம் 28 ஆந் திகதியிலிருந்து பயன்வலுப் பெறும் வகையில் இரத்துச்செய்யப்படுகிறது.*

*றிஷாட் பதியுதீன்,*
*கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சர்.*

*கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு,*
*கொழும்பு,*
*2012, யூன் 27.*

*அட்டவணை*

| இ.பொ. தலைப்பு I | இ.மு.பொ குறியீடு II | | விபரம் III | செஸ்வரியின் விகிதம் IV |
|---|---|---|---|---|
| 07.10 | | | **மரக்கறி வகைகள் (சமையல் செய்யப்படாதவை அல்லது நீராவியால் அல்லது கொதி நீரில் சமைக்கப்பட்டவை) குளிரால் உறையச் செய்யப்பட்டவை** | |
| | 0710.80 | - | பிற மரக்கறி வகைகள் | |
| | 0710.80.10 | --- | சமையல் செய்யப்படாதவை | ஒரு கி. கி. க்கு ரூபா 600.00 |
| 07.12 | | | **உலர்த்திய மரக்கறிகள், முழுமையான, துண்டாக்கிய, சீவப்பட்ட, உடைத்த அல்லது மாவாக்கப்பட்ட ஆனால் மேற்கொண்டு தயாரிக்கப்பட்டவை** | |
| | 0712.20 | - | வெங்காயங்கள் | ஒரு கி. கி. க்கு ரூபா 600.00 |

| இ.பொ. தலைப்பு I | இ.மு.பொ குறியீடு II | | விபரம் III | செஸ்வரியின் விகிதம் IV |
|---|---|---|---|---|
| | 0712.90 | - | பிற மரக்கறி வகைகள், மரக்கறிக் கலப்புகள்: | |
| | 0712.90.10 | --- | உள்ளி, (வெள்ளைப்பூடு) | ஒரு கி. கி. க்கு ரூபா 600.00 |
| | 0712.90.90 | --- | பிற | ஒரு கி. கி. க்கு ரூபா 600.00 |
| | | | | |
| **08.05** | | | **சிற்றஸ் பழங்கள் புதிய அல்லது உலர்ந்தவை** | |
| | | | | |
| | 0805.20 | - | மண்டாரின்கள் (ரஞ்சரின்களும் சற்சுமாக்களும் உட்பட) : கிளமென்ரைன் வில்கின்களும் அதுபோன்ற சிற்றஸ் கலப்புகளும் : | |
| | 0805.20.10 | --- | சோர்வற்ற புதிய | ஒரு கி. கி. க்கு ரூபா 30.00 |
| | | | | |
| **11.01** | 1101.00 | | **கோதுமை அல்லது மெஸ்லின் மா:** | |
| | 1101.00.10 | | கோதுமை | ஒரு கி. கி. க்கு ரூபா 20.00 |
| | | | | |
| **19.01** | | | **மோல்ட் பிரித்தெடுப்பு :வேறெங்கும் குறிக்கப்படாத அல்லது உள்ளடக்கப் படாத முற்றாக கொழுப்பு நீக்கப்பட்ட அடிப்படையில் கணிக்கப் பட்டவாறு கொக்கோவை நிறையில் 40மு வீதத்திலும் குறைவாகக் கொண்ட அல்லது கொக்கோவை கொண்டிராத மாவு, உமி நீக்கப்பட்ட கூழ வகை, துகள்கள் மாப்பொருள் அல்லது மோல்ட் பிரித்தெடுப்பு என்பவற்றால் ஆன உணவு தயாரிப்புகள்: வேறெங்கும் குறிக்கப்படாத அல்லது உள்ளடக்கப்படாத முற்றாக கொழும்பு நீக்கப்பட்ட அடிப்படை கணிக்கப்பட்டவாறு கொக்கோவை 5% வீதத்திலும் குறைவாகக் கொண்ட அல்லது கொக்கோவை கொண்டிராத தலைப்பு 04.01 முதல் 04.04 வரையானவற்றின் பொருட்களான உணவுத் தயாரிப்புக்கள்.** | |
| | | | | |
| | 1901.90 | - | பிற | |
| | 1901.90.10 | - | 04.01 தொடக்கம் 04.04 ஆந் தலைப்புக்களிலான பொருட்களைக் கொண்டுள்ள அல்லது கொண்டிராத பானங்களைத் தயாரிப்பதில் பாவிக்கப்படும் மோல்ட் பிரித்தெடுப்பு அடிப்படையிலான தயாரிப்புகள், சில்லறைப் பொதிகளில் அல்லது மொத்தப் பொதிகளிலானவை. | 15% |
| | | --- | பிற | |
| | 1901.90.91 | ---- | சோளத்தை அடிப்படையாகக் கொண்ட தயாரிப்புகள் | 15% |
| | 1901.90.92 | ---- | சோயா அவரையை அடிப்படையாகக் கொண்ட தயாரிப்புகள் | 15% |
| | 1901.90.93 | ---- | பச்சைக் கடலையை அடிப்படையாகக் கொண்ட தயாரிப்புகள் | 15% |
| | 1901.90.99 | ---- | பிற | 5% |
| | | | | |
| 72.04 | | | **பெரஸ் கழிவு அல்லது துண்டுகள்: இரும்பின் அல்லது உருக்கின் கழிவினை மீள உருக்குவதினால் பெறப்பட்ட கட்டிகள்** | |
| | | | | |
| | 7204.10 | - | வார்ப்பிரும்பின் கழிவுகளும் துண்டுகளும்: | ஒரு கி.கி. க்கு ரூ. 10.00 |
| | | - | கலப்புருக்கின் கழிவுகளும் துண்டுகளும்: | |
| | 7204.21 | -- | வெள்ளுருக்கின் | ஒரு கி.கி. க்கு ரூ.10.00 |
| | 7204.29 | -- | பிற | ஒரு கி.கி. க்கு ரூ.10.00 |
| | 7204.30 | - | தகர இரும்பின் அல்லது உருக்கின் கழிவுகளும் துண்டுகளும் | ஒரு கி.கி. க்கு ரூ.10.00 |
| | | - | பிற கழிவுகளும் துண்டுகளும் | |
| | | | | |
| | 7204.41 | -- | கடைச்சல் கழிவுகள், சீவல்கள், துகள்கள், பட்டறைக் கழிவுகள், அரிவு தூள்கள், நிரப்பிகள், வெட்டுத்துண்டுகளும் அடிக்கழிவுகளும் கட்டுகளாக அல்லது கட்டுகள் அல்லாமலும் | ஒரு கி.கி. க்கு ரூ.10.00 |
| | 7204.49 | -- | பிற | ஒரு கி.கி. ரூ.10.00 |

| இ.பொ. தலைப்பு I | இ.மு.பொ குறியீடு II | | விபரம் III | செஸ்வரியின் விகிதம் IV |
|---|---|---|---|---|
| | 7204.50 | - | மீள உருக்கிய கழிவுப்பாளங்கள் | ஒரு கி.கி. க்கு ரூ.10.00 |
| 72.13 | | | **சட்டங்களும் தண்டுகளும் சூடாக்கி உருட்டியவை, சீரில்லாத வகையில் சுற்றுக்களில் சுற்றப்பட்டவை இரும்பின் அல்லது கலப்பற்ற உருக்கின்** | |
| | 7213.10 | - | உருட்டும் போது பள்ளங்கள், நெளிவுகள், மிதப்புகள் அல்லது வேறு குறை பாடுகள் உருவாக்கப் பெற்றவை: | |
| | 7213.10.10 | --- | தட்டையான வளையங்கள் மற்றும் மாற்றியமைக்ப்பட்ட செவ்வகம் | ஒரு கி.கி. க்கு ரூ.15.00 |
| | 7213.10.90 | --- | பிற | ஒரு கி.கி. க்கு ரூ.15.00 |
| | 7213.20. | - | இலகுவாக வெட்டக் கூடிய உருக்கினாலான பிற | ஒரு கி.கி. க்கு ரூ.15.00 |
| | | | பிற | |
| | 7213.91 | -- | 14 மி.மீ. விட்டத்திலும் குறைவான வட்ட வடிவ வெட்டு முகத்தைக் கொண்டவை | ஒரு கி.கி. க்கு ரூ.15.00 |
| | 7213.99 | -- | பிற | ஒரு கி.கி. க்கு ரூ.15.00 |
| | | | | |
| 72.14 | | | **பிற சட்டங்களின் தண்டுகளின் இரும்பினாலான அல்லது உருக்கினா லானவை. சூடாக்கி உருட்டிய சூடாக்கி இழுக்கப் பெற்றவை. அல்லது சூடாக்கி புறத்துப் பெற்ற மேலும் வேலை செய்யப்பெறாத ஆனால் உருட்டிய பின் முறுக்கியவைகள் உட்பட** | |
| | 7214.10 | - | ஊலையிற் போட்டு உருட்டியவை | |
| | 7214.10.10 | --- | தட்டையான வளையங்கள் மற்றும் மாற்றியமைக்கப்பெற்ற செவ்வகம் | ஒரு கி.கி. க்கு ரூ.15.00 |
| | 7214.10.90 | --- | பிற | ஒரு கி.கி. க்கு ரூ.15.00 |
| | 7214.20 | - | உருட்டும்போது அல்லது உருட்டிய பின் முறுக்கும்போது பள்ளங்கள், நெளிவுகள், மிதப்புகள் அல்லது வேறு குறைபாடுகளைக் கொண்டிருப்பனவற்றின்: | |
| | 7214.20.10 | --- | தட்டையான வளையங்கள் மற்றும் மாற்றியமைக்கப்பெற்ற செவ்வகம் | ஒரு கி.கி. க்கு ரூ.15.00 |
| | 7214.20.90 | --- | பிற | ஒரு கி.கி. க்கு ரூ.15.00 |
| | 7214.30 | - | பிற, இலகுவாக வெட்டக்கூடிய உருக்கு | ஒரு கி.கி. க்கு ரூ.15.00 |
| | | - | பிற | |
| | 7214.91 | -- | செவ்வக (சதுரம் உட்பட) வடிவ குறுக்கு வெட்டுடையவை | |
| | 7214.91.10 | --- | 0.25 வீத குறைவான காபனையும் 30 மி.மீ. அகலத்திற்கு மேற்படாததும் 6 மி. மீ இற்கு மேற்படாத தடிப்புடைய | ஒரு கி.கி. க்கு ரூ.15.00 |
| | 7214.91.20 | --- | பிற 0.25 வீத குறைவான நிறையுடைய காபனையும் தவிர்ந்த தட்டையான சட்டங்கள் | ஒரு கி.கி. க்கு ரூ.15.00 |
| | 7214.91.90 | --- | பிற | ஒரு கி.கி. க்கு ரூ.15.00 |
| | 7214.99 | -- | பிற | ஒரு கி.கி. க்கு ரூ.15.00 |
| | | | | |
| 72.17 | | | **கலப்பற்ற உருக்கின் அல்லது இரும்பினாலான கம்பி** | |
| | 7217.20 | - | நாகத்தினால் தகடு பொதிக்கப்பட்டவை அல்லது மூடப்பட்டவை | |
| | 7217.20.20 | --- | குறுக்களவானது 1.6 மி.மீ. அல்லது அதற்கு மேற்பட்ட ஆனால் 4 மி.மீ. க்கு மேற் படாத வட்ட கூரான நேரான வயர் | ஒரு கி.கி. க்கு ரூ.15.00 |
| | 7217.20.90 | --- | பிற | ஒரு கி.கி. க்கு ரூ.15.00 |
| | | | | |
| 73.06 | | | **பிற குழல்களும் குழாய்களும் உட்புழையுடைய பல் வடிவங்களும் (உதாரணமாக வெளி மூட்டுவாய் அல்லது ஒத்த வகையில் மூடப்பெற்ற இரும்பின் அல்லது உருக்கின்). (+)** | |
| | | | | |
| | 7306.30 | - | பிற, ஒட்டப்பட்ட வட்ட வடிவான, வெட்டுமுகமுடைய இரும்பின் அல்லது கலப்பிலாத இரும்பின் | 20% |
| | | - | பிற, ஒட்டப்பட்ட வட்ட வடிவற்ற வெட்டு முகமுடைய பகுதி | |
| | 7306.61 | -- | செவ்வகமான அல்லது சதுரத்தினது வெட்டுமுக பகுதிகளில் | |
| | 7306.61.90 | --- | பிற | 10% |
| | 7306.69 | -- | பிற, ஒட்டியான, வட்ட வடிவற்ற வெட்டு முகமுடைய | |
| | 7306.69.90 | --- | பிற | 10% |
| | 7306.90 | - | பிற | |
| | 7306.90.90 | --- | பிற | 10% |

**திருத்தம் செய்தல்**

***1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம்***

*14 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் 2012.06.13 ஆந் திகதிய 1762/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் பகுதி I: தொகுதி (I) தொகுதி (I) பொது பிரிவு: I ல் பிரசுரிக்கப்பட்ட பந்தி:*

*"கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சர் ரிஷாட் பதியுதீன் ஆகிய நான், நிதி, திட்டமிடல் அமைச்சரின் உடன்பாட்டுடன், 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14(1) ஆம் பிரிவின் மூலம் எனக்களிக்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம், 2012 யூன் மாதம் 06 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில், 2011.11.21 ஆந் திகதிய 1733/05 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அட்டவணையின் III ஆவது நிரலில் குறிப்பிடப்பட்டிருக்கும் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படும்போது அவற்றிற்கான செஸ் வரியானது, அவ்வட்டவணையின் நேரொத்த IV ஆவது நிரலில் பதிலீடு செய்யப்பட்டுள்ள சதவீதங்களின்படி அறவிடப்படுதல் வேண்டுமென இக்கட்டளை மூலம் பிரகடனப்படுத்துகின்றேன்."*

*கீழ் குறிப்பிடப்படுவதனைப் போன்று திருத்தி வாசிக்கப்படல் வேண்டும்.*

*"கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சர் ரிஷாட் பதியுதீன் ஆகிய நான், நிதி, திட்டமிடல் அமைச்சரின் உடன்பாட்டுடன், 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14(1) ஆம் பிரிவின் மூலம் எனக்களிக்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம், 2011 நவெம்பர் மாதம் 21 ஆந் திகதிய 1733/05 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் பிரசுரிக்கப்பட்ட அட்டவணையின் II ஆவது மற்றும் III ஆவது நிரல்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் பொருட்களின் ஏற்றுமதியின் பேரில், இத்துடன், கீழ் குறிப்பிடப்படுகின்ற அட்டவணையின் II ஆவது மற்றும் III ஆவது நிரல்களுக்கு நேரொத்த IV ஆவது நிரலில் குறிப்பிடப்பட்டிருக்கும் பெறுமானங்கள் மற்றும் அலகுகள் என்பனவற்றிற்கமைய, 2012 யூன் மாதம் 12 ஆந் திகதியிலிருந்து பயன்வப்பெறும் வகையில், செஸ் வரியொன்று விதிக்கப்பட்டு அறவிடப்படுதல் வேண்டுமென இக்கட்டளை மூலம் பிரகடனப்படுத்துகின்றேன்."*

*ரிஷாட் பதியுதீன்,*
*கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சர்.*

*கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சு,*
*கொழும்பு.*
*2012, யூன் மாதம் 13 ஆந் திகதி.*

*06-1095*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.